FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

DSP Virudhunagar C 8081643

1. District : மாவட்டம் தூத்துக்குடி PS: காவல்நிலையம் தூ.த.கோ.மாநகர் Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 01/2025 Date: நாள் 10.07.25

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: U/s 7(a) of PC Act 1988 as amended in 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21.06.2025 at 13.30hrs Date to : நாள் வரை 03.07.2025 at 11.55hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 09.11.2025 at 12.40hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.07.2025 Time : நேரம் 01.30hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு பிரதி

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தோராயமாக 33.கி.மீ தூரம் தென்மேற்கு திசையில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. மகேஷ்வரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தனராஜ்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28 மே (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் IT பணியாளர் (g) Address : முகவரி கதிரவன். 8/13, ராஜ்நகர் முதல் தெரு, கோவில்பட்டி அருகில், கோவில்பட்டி நகரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரம், ராஜ்நகர் முதல் தெரு, கதிரவன் வீடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

5.7.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.07.2025 - at 10.15hrs.

Name பெயர் ப. பத்மநாபன்,
Rank நிலை ..... No. எண் .....,
காவல் ஆய்வாளர்,
அரசு தலைமை மருத்துவமனை பரமக்குடி.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்: 6/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 10.07.2025-ம் தேதி காலை 07.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திரு.D.மதிசங்கர், வயது 28/2025, த/பெ. துரைசாமி, கதவு எண்.8/73, ரெங்கநாதபுரம், காசிப்பாளையம் அஞ்சல், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் என்பவர் நிலையம் ஆஜராகி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரை பெற்று 10.07.2025ம் தேதி காலை 08.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்:- D.மதிசங்கர், வயது 28/2025, த/பெ. துரைசாமி, கதவு எண்.8/73, ரெங்கநாதபுரம், காசிப்பாளையம் அஞ்சல், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல். பெறுநர்:- துணைக் காவல் கண்காணிப்பாளர், இலஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். MBA முடித்துவிட்டு சென்னையிலுள்ள ஒரு IT நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன். தற்போது எனது குடும்ப சூழ்நிலை காரணமாக IT வேலைக்கு செல்லவில்லை. எனது தந்தை திரு.துரைசாமி அவர்கள் கல்வார்பட்டி கிராம சர்வே எண். 605/1B2 என்ற சர்வே நம்பரில் அடங்கிய 2.86 ஏக்கர் நிலத்தில் ஆழ்துளைக் கிணறு அமைந்திருந்தார். அந்த ஆழ்துளைக் கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி கடந்த 27.03.2001ல் விண்ணப்ப எண். EEND234/2000ன் படி விண்ணப்பம் செய்திருந்தார். அதன் பின்னர் மேற்படி சர்வேயில் அடங்கிய நிலத்தை எனது தாயார் திருமதி.சாமியாத்தாள் விற்பனை பத்திரம் எழுதிக் கொடுத்து வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 980/2003 ஆக பதிவு செய்திருந்தார். இந்நிலையில் எனது தந்தை கடந்த 19.12.2010ல் இறந்துவிட்டார். அதன் பின்னர் எனது தந்தை பெயரில் ஆழதுளைக் கிணறு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்திருந்த விபரங்களின் தற்போதைய நிலை எங்களுக்கு தெரியாததால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஆவணங்கள் கேட்டு விண்ணப்பம் செய்தேன். அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்களில் ஒட்டன்சத்திரம் செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கான 90 நாட்கள் தயார்நிலை அறிவிப்பை 13.07.2020ல் எனது தந்தை திரு.துரைசாமி அவர்களுக்கு அனுப்பியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கல்வார்பட்டி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று விபரங்கள் கேட்டேன். அங்கிருந்த உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் என்னிடம் எனது தந்தை திரு.துரைசாமி

அவர்கள் இறந்துவிட்டதால் எனது அம்மா திருமதி.சாமியாத்தாள் பெயரில் விவசாய விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்து, அதன் பின்பு கால நீட்டிப்புக்கு கேட்டு கோப்பினை தயார் செய்து செயற்பொறியாளர் அவர்களுக்கு அனுப்பினால் ஒப்புதல் பெற்று ஆழ்துளைக் கிணறு விவசாய மின் இணைப்பு வழங்கிடலாம் என்று தெரிவித்தார். அதனால் கடந்த 15.10.2024 அன்று எனது அம்மா திருமதி.சாமியாத்தாள் பெயரில் இலவச விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றுதல் விண்ணப்பத்தை எனது அம்மா பெயரில் கல்வார்பட்டி உதவி பொறியாளர் அலுவலகத்தில் உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்தேன். நானும் எனது தம்பி ஸ்ரீமதி அவர்களும் எனது அம்மா பெயரில் மின் இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபணம் இல்லை என்று கடிதமும் அதனுடன் இணைத்திருந்தேன். அதன் பின்னர் ஒரு நாள் வேடசந்தூர் உதவி செயற்பொறியாளர், கல்வார்பட்டி உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் எங்கள் நிலத்திற்கு வருகை தந்து கள ஆய்வு செய்து எனது அம்மா திருமதி.சாமியாத்தாள் அவர்களின் ஆழ்துளை கிணறு பெயர் மாற்றம், மாற்று விண்ணப்பம் ஒப்புதல் பெற தயார்நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு செய்யக் கோரும் விண்ணப்பத்தை மேல் நடவடிக்கைக்கு அனுப்புவதாக கூறினார்கள். நானும் எங்கள் நிலம் தொடர்பான வருவாய் ஆவணங்களை கல்வார்பட்டி உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். கடந்த 21.06.2025ம் தேதி காலை சுமார் 10.25 மணிக்கு கல்வார்பட்டி உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் அவரது மொபைல் எண். 9789718764 லிருந்து எனது மொபைல் எண். 9843067418கு அழைத்திருந்தார். நான் வேலையாக இருந்ததால் எடுக்கவில்லை. பின்னர் சுமார் 10.39 மணிக்கு அவரது மொபைல் போனுக்கு அழைத்தேன். அப்போது உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் எனது அம்மாவின் பெயருக்கு மின் இணைப்பு தருவது தொடர்பாக அலுவலகத்தில் வந்து பார்க்குமாறு கூறினார். அதன்படி அன்று மதியம் சுமார் 01.20 மணிக்கு கல்வார்பட்டி மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களை சந்தித்து விபரங்கள் கேட்டேன். அப்போது திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் என்னிடம் எனது அம்மாவின் பெயரில் ஆழதுளை கிணறு பெயர் மாற்றம், மாற்று விண்ணப்பம் ஒப்புதல் பெற தயார் நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு செய்ய கோரிய விண்ணப்பம் தொடர்பான கோப்பினை தயார் செய்து செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமென்றால் லஞ்சமாக ரூ.30 ஆயிரம் அவருக்கு கொடுக்க வேண்டும்

என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், நான் அவ்வளவு பணம் தயார் செய்ய முடியாது. எனது அப்பாவும் இறந்துவிட்டார், அதனால் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்றேன். அவர் சரி பார்த்துக்கொள்ளலாம் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்னர் நான் 03.07.2025ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு எனது மொபைலுக்கு அழைத்து கல்வார்பட்டி EB அலுவலத்திற்கு வருமாறு AE திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் கூறினார். அதன்படி நானும் புறப்பட்டு சுமார் 11.55 மணியளவில் கல்வார்பட்டி AE திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது AE அவர்கள் என்னிடம் உடனே EE அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் ரூ.3,000/-ம் கொடு என்றார். நான் அவசரமாக வந்ததால் ரூ.2,000/-ம் தான் உள்ளது என தெரிவித்தேன். என்னிடமிருந்த பணம் ரூ.2,000/-த்தை AE திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் வாங்கிக்கொண்டார். பின்னர் என்னிடம் மீதி பணத்தினை 8ம் தேதி வாங்கிக்கொள்கிறேன் என்று தெரிவித்தார். நானும் அங்கிருந்து வந்துவிட்டேன். இந்நிலையில் 09.07.2025ம் தேதி காலை சுமார் 12.40 மணிக்கு AE திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து மின் இணைப்பு தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் பைலை பெயர் மாற்றம் செய்ய கொடுத்துவிட்டதாகவும், மின் இணைப்பினை ஆகஸ்ட் 15க்குள் கொடுக்க நடவடிக்கை எடுப்பதற்காக மீதிப்பணம் ரூ.20 ஆயிரம் லஞ்சமாக கொடுத்துவிடுங்கள் அப்பொழுதுதான் பைலை அனுப்ப முடியும் என்று தெரிவித்தார். நான் அவ்வளவு பணம் இல்லை என்றும், யாரிடமாவது வாங்கித்தருகிறேன் எனவும், நாளைக்குத்தான் கொடுக்க முடியும்என்று தெரிவித்தேன். அதற்கு அவர் 09.07.2025 மாலையில் எனது மொபைலில் கூப்பிட்டு பேசுவதாகவும், 10.07.2025 அன்று பணத்தை பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் நான் அங்கிருந்து வந்துவிட்டேன். எனது அப்பா திரு.துரைசாமி பெயரில் ஆழ்துளை கிணறு விவசாய மின் இணைப்பு வேண்டி 2001ல் விண்ணப்பம் செய்த நிலையில் 25 வருடங்கள் போராடி எனது அம்மாவின் பெயரில் அதனை வாங்கி லஞ்சம் ரூ.20,000/-ம் கல்வார்பட்டி AE திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு கொடுத்து வேலையை முடிக்க விருப்பமில்லை. இந்த புகாருடன் எனது தந்தை விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் கொடுத்ததற்கான பதிவுச் சான்றிதழ் நகலையும், இலவச விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் வேண்டி எனது அம்மா பெயரில் வழங்கிய விண்ணப்பத்தின் நகலையும் இணைத்துள்ளேன். மேலும் கல்வார்பட்டி உதவி மின் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன் லஞ்சமாக கேட்ட பணம்

ரூ.20,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (D. மதிசங்கர், 10.07.2025)

Sir, Received the complaint on 10.07.2025 at 7.30 Hrs. A confidential verification was made on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.06/2025 u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 10.07.2025 at 08.30 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 10.07.2025)

Original FIR along with the complaint of Tr.D.Mathisankar, age 28/2025 S/o.Duraisamy, D.No.8/73, Renganathapuram, Kasipalayam Post, Vedasandur Taluk, Dindigul are submitted to the Hon'ble Principal District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

P. Palanisamy 10/07/25

(P.Palanisamy)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.